# குமரன்

70
அக்டோபர்
1989

கோவை புத்தக நிலையம்
கோயம்பு - 12.

● முதலாளித்துவமும் சோஷலிசமும்
● சோஷலிச சமுதாயம்
— தியாகு

● இக்கரைக்கு அக்கரை பச்சை
● உலகத்து நிலத்தில் ஒரு பங்கு
— 'மதி'

● திருக்குறள் ஆசிரியர் சமணரா ? பௌத்தரா ?
— T. சுப்பிரமணியம்

● கலை, இலக்கியத்தின் நோக்கங்களும் பணியும் — 6
— மாதவன்

● இலங்கையின் ஆளும் வர்க்கம் சில குறிப்புகள்
— 'அழகன்'

● அ.ந.க.வின் 'மதமாற்றம்' - நாடகம்
— செ.. கணேசலிங்கன்

● கேள்வி ? பதில் !

விலை: ரூ. 3/-

# எங்கும் விற்பனையாகிறது!

'தமிழவேள்' எழுதிய

## தமிழ் - ஆண்டு 9

ரூபா 14.00

## தமிழ் - ஆண்டு 10

ரூபா 15.00

*பயிற்சி விளக்கங்கள் விடைகளுடன்*
*மாணவர்க்கும் ஆசிரியர்க்கும்*
*பயன்படத்தக்க அரிய நூல்கள்*

கணேசர் - சிவபாலன் எழுதிய

## உயர்தர இரசாயனம்

ரூபா 90.00

A. L. வகுப்பு பாடநூல்

*விற்பனையாளர்க்கு கழிவு உண்டு*

## குமரன் புத்தகசாலை

**201, டாம் வீதி, கொழும்பு - 12.**

**Tel : 421388**

# முதலாளித்துவமும் சோஷலிசமும்

★ 'தியாகு'

சோவியத் நாட்டில் லெனின் தலைமையில் அக்டோபர் புரட்சி நடைபெற்று 72 ஆண்டுகளாகிவிட்டன. முன் என்றுமில்லாத விதமான வேகத்தில் 'சோஷலிசம் தோற்றுவிட்டது; முதலாளித்துவம் வென்று வருகிறது' என்ற கூக்குரல்களை கேட்கிறோம். ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளின் மக்கள் தொடர்பு சாதனங்களே (Mass media இவ்வாறு கொக்கரிக்கின்றன.

1. சோவியத் நாட்டின் இனப்பிரச்சினைகள்

2. சீனாவின் மாணவர் கிளர்ச்சி.

3. போலந்தின் தொழிற்சங்க ஆட்சி.

4. கிழக்கு ஜெர்மனியர் மேற்கு ஜெர்மனிக்குள் இடம்பெயர்தல்

இவை அடுத்தடுத்த மாத நிகழ்ச்சிகளாக உலக முதலாளித்துவ மக்கள் தொடர்பு சாதனங்களுக்கு சோளப் பொரியாகக் கிடைத்தன; எங்கள் நாட்டு தொடர்பு சாதனங்களுக்கும் மெல்லுவதற்கு அரிசிப் பொரியாகின.

முதலாளித்துவம், தான் வளர்ந்து வந்த வரலாற்றை மறந்துவிடுகிறது.

1789ல் பிரெஞ்சுப் புரட்சியோடு ஆரம்பித்த முதலாளித்துவப் புரட்சியின் காலகட்டத்திய மன்னர்களும் நிலப்பிரபுக்களும் இதே பாட்டையே பாடிக் கொண்டிருந்தனர். முதலாளித்துவ நாடுகளிடை போட்டா போட்டி, விற்பனையில் தேக்கம், வீழ்ச்சி, யுத்தம் ஏற்பட்ட வேளைகளிலும், தேசிய எழுச்சியில் ஐரோப்பிய நாடுகள் பிரியும் போதும் நிலப்பிரபுத்துவம் சார்ந்தவரெல்லாம் முதலாளித்துவத்தின் வீழ்ச்சியையே கனவு கண்டு கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர்.

அதே வேளை, இன்று நேற்றல்ல, சோஷலிசத்திற்கு எதிரான ஒடுக்கு முறைகளையும் பிரச்சாரத்தையும் முதலாளித்துவம் சென்ற 100 – 200 ஆண்டுகளாக நடத்திக் கொண்டேயிருக்கிறது. தொழி

வாளர்களின் போராட்டங்கள், உலக யுத்தங்கள், காலனித்துவத்திற்கு எதிரான போராட்டங்கள் ஆகியன உலக உழைக்கும் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளையும் சமூக அந்தஸ்தையும் மதிப்பையும் அளித்து வரவே செய்தது. இது தவிர உலகின் மூன்றில் ஒரு பகுதி மக்கள் புரட்சிக்குப் பிந்திய புதிய சமுதாய மக்களாக வாழ்ந்து கொண்டேயிருக்கின்றனர்.

இலாபமும் தனிச்சொத்துமே நோக்காகக் கொண்ட சுயநலம் மிக்க முதலாளித்துவம் நுகர்பண்ட உற்பத்தியில் இன்று திறமை பெற்றதாயிருக்கலாம். அதனால் எதிர்காலத்திலும் இதே நிலை தொடர்ந்து நிலவும் என எவரும் கூறிவிடமுடியாது.

முதலாளித்துவம் இலாபமே நோக்காக உலக வளங்களை வேகமாக அழித்துக் கொண்டிருக்கிறது. நாளைய சந்ததி பற்றியே கவலையில்லை. செல்வந்தர் மேலும் செல்வந்தராக, ஏழைகள் மேலும் ஏழைகளாகி வருகின்றனர்.

உலகச் சுற்றுடல் மாசடைந்து வருகிறது. குற்றச் செயல்கள் பெருகுகின்றன. அபின், கஞ்சா, ஹீரோயின் போன்ற போதைப் பொருட்களை உட்கொள்வோர் பெருகி வருகின்றனர்.

முதலாளித்துவ அமைப்பைப் போற்றுவோர் மேலும் விரும்புபவை: ஆபிரிக்கா பிற மூன்றும் உலக நாட்டு மக்களின் பட்டினிச் சாவும் போஷாக்கின்மையும், உலகச் சுரண்டல், கலை, இலக்கியம் மூலம் பண்பாட்டுச் சிதைவும் விற்பனையும், தொழில்நுட்ப வளர்ச்சியில் வேலையில்லாத் திண்டாட்டம், நச்சுப்பரப்பலும் அதன் வியாபாரத்தில் லாபமும்.

இவற்றையெல்லாம் நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்; புரட்சி பற்றிப் பேசப்படாது; முதலாளித்துவம் எல்லாம் தரும், சோஷலிசம் திறமையற்றது, இதுவே அவரின் பிரச்சாரம்.

ஹான்ஸ் கோனிஸ் என்ற மார்க்சிய அறிஞர் முதலாளித்துவத்தின் இன்றைய பொய்ப்பிரசாரத்திற்கு பின்வருமாறு பதிலளிக்கிறார்.

"மனித இயல்பை உங்களால் மாற்ற முடியாது, சோஷலிசத்திற்கு இனி எதிர்காலமில்லை என்று கூறும் நியாயம் சரியானதாயின் இக்கூற்று மனித இனத்திற்கு எதிர்காலமில்லை என்பதையும் நிரூபிக்கும்."

# இக்கரைக்கு அக்கரை பச்சை

— மதி —

சோவியத் நாடு உட்பட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோஷலிசத்தை நோக்கிய வளர்ச்சியில் முதன்மை வகிக்கும் நாடு கிழக்கு ஜெர்மனி என்று கூறப்படுகிறது.

கிழக்கு ஜெர்மனி தொழில்நுட்பம், யந்திர உற்பத்தி, விவசாயம் அனைத்திலும் மிக்க வளர்ச்சி பெற்றுள்ளது; பிற நாடுகளை அத்து மீறிச் சுரண்டாது உள்நாட்டிலும் சமூக பாதுகாப்புக்களில் மிக முன்னேற்றம் கண்டுள்ளது.

இத்தகைய சூழலிலிருந்து 10 – 20 ஆயிரம் குடும்பத்தவர்கள் கங்கேரி வந்து ஒஸ்ரியாவழியாக மேற்கு ஜெர்மனிக்குள் நுழைகின்றனர். இவர்கள் அகதிகள், சோஷலிசம் தோற்றுவிட்டது, முதலாளித்துவம் வெற்றி பெற்று வருகிறது என்று முதலாளித்துவ உலகம் பிரச்சாரம் செய்கிறது. இது பெரிய வேடிக்கையானது மட்டுமல்ல தவறான பிரச்சாரமுமாகும். மக்கள் சமூகம் வரலாற்றுக் காலம் தொட்டு பசுமையை நோக்கி இடம் பெயர்வது நடைபெற்றே வருகிறது. இன்றும் இப்போக்கு உலகெங்கும் நடைபெற்றே வருகிறது, மொத்தக் குடித்தொகையில் ஒருசதவீதத்திற்குள்ளாகவே இவ்வாறு இடம்பெயர்கிறது. இந்தியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் மட்டுமல்ல முதலாளித்துவ நாடுகளுக்கும் இடம்பெயர்ந்துள்ளனர். இலங்கையர் இடம் பெயர்வது இன்று பல காரணங்களால் அதிகரித்துள்ளது. ஆங்கிலேயர் இன்றும் கனடா, அவுஸ்ரேலியா நோக்கிச் செல்லுகின்றனர். ஜெர்மனியர் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் குடியேறியுள்ளனர். ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC) விரைவில் பரவலாக முதலாளித்துவ சமூகங்களையே ஒன்றிணைக்கப் போகிறது. அவ்வேளை இடம் பெயர்தல் மேலும் விரிவாகும்.

புரட்சி நடைபெற்றதும் தாக்குப்பிடிக்காத வர்க்கத்தவர் நாட்டைவிட்டு ஓடுவது இயல்பே. இதற்கு முதலாளித்துவம் உதவுகிறது. வியத்நாம் யுத்தம் முடிந்ததும் பல்லாயிரக்கணக்கானவர் கப்பல்களிலும் படகுகளிலும் அமெரிக்காவரை சென்றனர்.

முதலாளித்துவ அமைப்பில் வாய்ப்பாக சுரண்டி வாழ்ந்தவர் புரட்சி ஏற்பட்டதும் நாட்டைவிட்டு ஓடுவது இயல்பே. முற்போக்கான அரசியலுணர்வு பெருதவர்களே பெரும்பாலும் சோஷலிசத்தைக் கண்டு ஓடுபவர்களாவர். இன்று முதலாளித்துவம் (யுத்த தளபாடங்களுக்கு அடுத்ததாக) நுகர் பண்ட உற்பத்தியிலேயே வேகமாக ஈடுபட்டுள்ளது. நுகர் பண்டப் பிரச்சாரம் மக்களிடை வெறியையே ஏற்படுத்தியுள்ளது. இவ்வெறி என்றும் தணியாதது. உற்பத்தியாளரிடையே போட்டாபோட்டி போல நுகர்வோரிடையேயும் வாங்குவதில் போட்டாபோட்டி. இவற்றிற்காக கூலி உழைப்பாளரே அதிகநேரம் உழைப்பதற்கு தயாராக உள்ளனர். தொழில் நுட்பம் வளர்ச்சியடைந்து வருவதாக வீரம் பேசிய போதும் முதலாளித்துவ நாடுகளில் வேலை நேரம் குறைக்கப்படவில்லை.

நுகர் பண்ட வேட்கையைத் தணிக்க முதலாளித்துவ நாட்டுத் தலைநகரங்களை நோக்கி மூன்றும் உலக நாடுகளிலிருந்தும் இடம் பெயர்ந்து கொண்டே இருக்கின்றனர்.

சோஷலிச சமூக வளர்ச்சியை இழிவுபடுத்த முதலாளித்துவம் இடம் பெயரும் மக்களை அகதிகளாக்கிப் பிரச்சாரம் செய்கிறது. இடம் பெயர்வோரின் உழைப்புச் சக்தியை முதலாளித்துவம் குறைந்த விலைக்குவாங்கி லாபம் திரட்டப் போகிறது. மேற்குஜெர்மனியில் உழைக்கும் மக்களிடம் உழைப்பு சக்தி தவிர என்ன இருக்கிறது? அங்குள்ள பெரும்பாலான உழைக்கும் மக்களும் பாட்டாளிகளான அகதிகளே.


# குமரன்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ 3/– |
| 6 இதழ்கள் | ரூ 17/- |
| 12 இதழ்கள் | ரூ 33/– |

விற்பனையாளர்க்கு கழிவு உண்டு.

ஆங்காங்கே வரவழைத்து விநியோகிக்க
விரும்புவோர் தொடர்பு கொள்க:

ஆசிரியர், குமரன்,
201, டாம் வீதி, கொழும்பு - 12. தொலைபேசி: 421388

# உலகத்து நிலத்தில் ஒரு பங்கு

— மதி —

சுகுமார் பாடசாலையால் வந்ததும் அப்பாவைத் தேடினான். அப்பா அண்மையில் வாங்கிய நிலத்திற்கு எல்லை மரம் நட்டு முள்ளுக் கம்பி வேலி போடும் வேலையில் ஈடுபட்டிருந்தார். இரு கூலியாட்கள் அவரது ஆணைப்படி வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

''என்னப்பா செய்கிறீர்கள்?''

''வீட்டு நிலத்தோடு சேர்த்து, வாங்கிய நிலத்திற்கும் முள்வேலி போடுகின்றோம்.''

''ஏனப்பா இந்த வேலி?''

''இது எங்கள் சொத்து. பாதுகாப்பாக இருக்கவேண்டும்.''

''அடுத்த வீட்டு அமுதா வீட்டு நிலம் எப்படியப்பா எங்களுடையதானது.''

''நாங்கள் பணம் கொடுத்து வாங்கி உறுதி எழுதியுள்ளோம்.''

''உறுதி என்றால் என்னப்பா?''

''நிலத்தின் எல்லைகள் அளவுகளைக் குறிப்பிட்டு பத்திரம் எழுதி அவர்களது ஒப்பம் பெற்றுவிட்டோம். அதை காணிக்கந்தோரில் பதிந்து விட்டால் வேறு எவரும் உரிமை கோர முடியாது.''

''வீட்டு நிலமும் இப்படித்தான் வாங்கினீங்களா?''

''இல்லை. எங்க அப்பா சொத்து. பரம்பரைச் சொத்து எனக்குச் சேர்ந்தது.''

''அடுத்த வீட்டார் நிலத்தையெல்லாம் ஏனப்பா வாங்கினீங்க''

''உனக்காகத்தான்''

''எனக்கு எதற்கப்பா நிலம்? நீங்க செய்யிறது தப்பாகத் தெரியுது?''

அப்பா வியப்படைந்தார். மகனின் காரணத்தை அறிய வினு எழுப்பினர்.

''ஏனப்படிச் சொல்லுகிருய்?''

''உலகத்தில் ஐந்நூறு கோடிப் பேர் வாழ்கிருர்களாம், அவர்கள் எல்லோருக்குமே இந்த உலகம் சொந்தமானது என வாத்தியார் சொன்ஞர்.''

''அதற்காக''

''அப்ப எல்லோருக்கும் சொந்தமான உலகத்திலே இது எங்க நிலம் என்று முள்ளு வேலிபோட்டு வைக்கிறது தப்பில்லேயா?''

''நாங்களும் இந்த உலகத்திலே தானே வாழவேண்டும்.''

''சொந்த நிலமே இல்லாமல் உலகிலே முக்கால்வாசிப் பேருக்கு மேலாக வாழுருங்களாம். அப்ப நாங்க எப்படி அடுத்த வீட்டார் நிலத்தையும் பறித்து வைக்க முடியும். முள்ளு வேலி போட்டு எங்க நிலம் என்று சொல்ல முடியும்?''

அப்பாவால் உடனே பதில் கூற முடியவில்லே. தக்க பதில் தேடி சிந்திக்கத் தொடங்கினர்.

பெருந்தோட்ட உற்பத்தி 1250 துரைமாருக்கும் 10,000 பெருந்தோட்ட முகாமையாளருக்குமாக நடைபெறவில்லே. 1.68 கோடி மக்கள் வாழ்வுக்காக நடைபெறுகிறது. 50% வெளிநாட்டுச் செலாவணியை பெருந்தோட்டத் தொழிலே தருகிறது. உலகில் கென்யா தவிர வேறு எந்த நாடும் இந்த நிலேயில் இல்லே. பெருந்தோட்ட அரச கூட்டுத் தாபனங்கள் தற்போது ஆண்டுதோறும் ரூ. 100 கோடி நட்டமடைகின்றன.

காமினி திசாநாயக்கா.

# திருக்குறள் ஆசிரியர்
# சமணரா? பௌத்தரா?

T. சுப்பிரமணியம்

*(சென்ற இதழில் திரு. வீரரட்ண எனபவரின் கருத்துக்கு 14.9.89 இல் டெய்லி நியூஸ் நாளிதழில் கூறப்பட்ட பதிலின் சுருக்கம்)*

கடைச் சங்ககாலமான கி. பி. முதல் 3 நூற்றுண்டுகளில் வாழ்ந்த பெரும் புலவர்கள் தம் பாடல்களில் வள்ளுவரைப் புகழ்ந்திருப்பதால் அன்னுர் கி. பி. முதலாம் நூற்றுண்டில் வாழ்ந்திருக்க வேண்டும். திரு. வீரரட்ன கூறியதுபோல கி. பி. 6 ஆம் நூற்றுண்டல்ல.

திருவள்ளுவர் பற்றித்தெரிந்தவை: மயிலாடுதுறை என்று முன் கூறப்பட்ட இன்றைய மைலாப்பூரில் வாழ்ந்தவர்; திருமணமானவர்; நெசவுத்தொழிலாளர். திருக்குறள் முதல் 10 செய்யுளேயும் திரு. வீரரட்ன தமது தேவைக்கேற்ப ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

வள்ளுவர் முதல் அதிகாரத்திற்கு 'கடவுள் வாழ்த்து' எனத் தலேப்பிட்டுள்ளார். அதில் 7 குறளில் 'தாள்' / 'அடி' என்ற சொற்களேப் பயன்படுத்திய போதும் ஒன்றில் (3ஆவது), மட்டுமே 'மலர்' என்ற பொதுவார்த்தையை இட்டார். இது தாமரை மலரை மட்டும் குறித்த தல்ல.

திரு. வீரரட்ன 5 குறளில் 'தாமரைப் பாதம்' என வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். 3 வதில் வரும் 'இறைவன்' என்பது கடவுளே.

வள்ளுவர் கோட்பாடு கொண்ட சித்தாந்தி, அனேவரும் கடவுளே வழிபட வேண்டும் என சூட்சுமமொழியில் கூறியுள்ளார்.

கி. பி. 6-8 ஆம் நூற்றுண்டுகளில் வாழ்ந்த நாயன்மார் நால்வரும் வள்ளுவர் கூறியது போல, (குழந்தைகள் தாயின் பாதத்தை இறுகப் பிடிப்பது போல) கடவுளின் தாள், அடி வணங்கி, இறுகப்பிடித்துக் கொள்வதாகவே தேவார, திருவாசகத்தில் பாடியுள்ளனர்.

அறம், பொருள், இன்பம் என திருக்குறள் வகுக்கப்பட்டதே ஆசிரியர் சமணரோ, பௌத்தரோ அல்ல என்பதை நிரூபிக்கும்.

வள்ளுவர் மற்றோர் சான்றுதும், சமணம் பௌத்தத்திற்கு முந்திய சனாதன தர்மத்தை சார்ந்தவர். பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் என்ற படிமுறையில் ஆசிரியர் உறுதி கொண்டவர்.

அதனாலேயே சந்நியாசத்திலும் பார்க்க குடும்ப வாழ்விற்கு அதிக முக்கியத்துவமளித்தார். அவர் எந்த முறையையோ, கோட்பாட்டையோ, சமய முறையையோ, நடைமுறையையோ, சடங்கையோ வெளிப்படையாகப் பரிந்துரைக்கவில்லை; அவரது சித்தாந்தம் உலகளாவியது.

---

## பஞ்சப்பட்ட பாமரனுக்கு

— சாருமதி —

பாடு படு
பட்டினி கிட
பேசும் மொழி
இனச் சுற்றத்தார்க்கு
தேசியத் தேவையாயின்
அதற்கு நீயே
சாருகப் பிழிபடு
இதயப் பொருமல்களை
இரண்டாம் பேருக்கும்
தெரியாமல்
பெருமூச்சாக்கு
நாளும்
பிள்ளைப் பாசத்தால் துவைபடு
பழிகளைச் சும
வீடிக்கும் வழியில்லாதவர்
போரிடப் போனதால்தான்
இந்தப்
பொல்லாப்பு வந்ததென
மேசைச் சாப்பாட்டை
மென்று விழுங்கவும்
பஞ்சிப்படும்
மேல்வர்க்கச் சிந்தனை முன்
நீயே குற்றவாளியாகு

இது உனது
இன்றைய யதார்த்தம்
ஆயினும் பாமரனே
ஒன்றை மட்டும் நம்பு
உன்னில் உயர்ந்தார்க்கு
ஊரை ஏமாற்று வோர்க்கு
உன்
பஞ்சப் பட்டாளத்தின்
பரம்பரை
இந்த மண்ணில்
தம்
தந்தையர் போல்........
தாயார் போல் ......
என்றும் ஏமாறுது
அவர்
தம்மைத் தாமாக்கி எழுவர்
தமிழனையும்
மனிதனுக்கி நிமிர்வர்
இதை நீ நம்பு
உன்னை
இருட்டிற்குள் வீழ்த்தியோர்க்கு
இதையே நீ துணிந்து சொல்லு.

# அ.ந.க.வின் 'மத மாற்றம்'

★ செ. கணேசலிங்கன்

விழாக்களிலும் சடங்குகளிலும் ஆடலும் பாடலும் இயல்பாக ஏற்பட்டன; பின்னர் மதச் சார்பான கதைகளும் கிராமியக் கதைகளும் ஆடியும் நடித்தும் காட்டப்பட்டன.

இதுவே இந்திய நாடகத்தின் தோற்றவாயில் என ஆய்வாளர் கூறுவர்.

கூத்து என்ற கலைவடிவம் தமிழரிடை இதே தோற்றுவாயுடன் ஏற்பட்டது எனக் கூறின் தவருகாது. கூத்து, ஆடல் பாடல் சார்ந்தது; நீண்டகாலமாக நிலைபெற்று வந்துள்ளது. 'கூத்தாட்டவைக் குழாத்தற்றே' என்ருர் வள்ளுவர்.

சிலப்பதிகாரமும் கிராமியக் கூத்துவடிவில் பிரபல்யமடைந்திருந்த கதையையே இளங்கோ காவியமாக்கினுர் என்பர். 'பாட்டிடையிட்ட உரைநடையாக'' காவியம் அமைந்திருப்பதும் இக் கருத்தை நிரூபிக்கிறது. புலவர்களாலேயே நாடகம் போன்ற கலை வடிவங்களும் உலகெங்கும் எழுதப்பட்டன என்பர். இளங்கோ, காளிதாசன், சேக்ஸ்பியர் யாவரும் கவிஞர்களே.

இன்றைய நாடகம் என்ற கலைவடிவம் எமக்குப் புதிதே.

கலைவடிவங்கள் நாட்டுக்கு நாடு, மொழிக்கு மொழி வேறுபடலாம். உற்பத்தி உறவுக்கேற்ப இவை மாற்றமடையும். உதாரணமாக நவீன காலத்தில் பிரபல்யமடைந்துள்ள நாவல், சிறுகதை என்ற கலை வடிவங்கள் முதலாளித்துவத்தில் – கூலி உழைப்பு உற்பத்தி உறவுக்காலத்தில் எழுந்தவையே.

எமது சிறுகதை, நாவல் போன்று இன்றைய நாடகமும் மேல் நாட்டிலிருந்து நாம் பெற்ற கலைவடிவமே. ஆங்கிலத்தின் மூலம் இங்கு நாம் பெற்றபோதும் இன்றைய மேடை நாடகம் ஆங்கிலேயர் ஆரம்பித்ததல்ல. ஹென்றிக் இப்சன் (1826–1906) என்ற நோர்வே நாடகாசிரியர் ஐரோப்பாவிற்குத் தந்த வடிவமே இன்று உலகெங்கும் மேடை நாடக வடிவமாகப் பரவியது; பல்வேறு பரீட்சார்த்தங்களுடன் வளர்ச்சி பெற்று வருகிறது.

இங்கிலாந்தில் இப்சனுக்கு முன்னர் நாடக மரபு இருக்கவில்லை என நான் கூறவரவில்லை. சேக்ஸ்பியர் (1564 - 1616) மார்லோ

(15 4 – 93) அன்றிருந்த நாடக மரபிற்கு வலுவூட்டியவரே. இன்று வரை நிலைபெற்றுள்ளனர்.

அன்றைய நாடக அமைப்பு முறையும் இப்சனின் பின் ஏற்பட்ட மாற்றமும் வேறு. மேடைக் காட்சிகள் தொடர்ந்து மாறும் முறை, நடைமுறைச் சமூகப் பிரச்சினைகள் ஆகியவற்றை கையாளும் போக்கு ஆகியவற்றையே குறிப்பிடுகிறேன்.

நாடகமாக எழுதப்படுவது, மேடையில் பேசுவதற்காக கூறப்படும் உரையாடல், காட்சி அமைப்புப் பற்றியவை முதலான விபரங்களே. இவற்றை நாம் மேடையில் பார்க்காது படிப்பதென்பது இரண்டாந்தரமானது. நாடகங்கள் நூல் வடிவில் தமிழில் வெளியிடப்படுவதில்லை என்ற குறைபாடும் உள்ளது; அவர்கள், 'நாடகம் மேடைக்காக' என்ற உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

சேக்ஸ்பியரின் நாடகங்கள் நூலுருப் பெற்று உலகெங்கும் படிக்கப்படுகிறது உண்மையே. நடிப்பதிலும் பார்க்க தாராளமாகப் படிக்கப்படுகிறது. அவை நாடகம் என்பதிலும் பார்க்க இலக்கிய நயம் செறிந்த எழுத்தாக இருப்பதுவே காரணம். இந்த அடிப்படை உண்மையை நாம் மறந்து விடப்படாது.

தனிமனிதன் மேடையில் நின்று தன் துன்பங்களைக் கொட்டுவதை, நாம் தனிமையில் படித்துச் சுவைக்கலாம். அவை இன்றைய நாடக மரபுக்கு ஒவ்வாதவை. சேக்ஸ்பியரின் பல நாடகங்களில் தனிப்பேச்சு (Soliloquy) இடம் பெறுவதைக் காணலாம். சேக்ஸ்பியரின் சிறப்பிற்கும் அவை உதாரணமாகக் கூறப்படுவதைக் காணலாம். (உ+ம் To be or not to be - ஹம்லெட்)

பர்னட் ஷாவின் நாடகங்களும் படித்துச் சுவைக்கக் கூடியவையே. காரணம் கருத்துகள் செறிந்தவை. முரண்பாடுகளைச் சொற்களால் சாடுவார். அவர் ஆக்கிய பாத்திரங்கள் அனைவர் மூலமும் ஷாவே உரையாடுவார்.

இன்று பிரபலமாக அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பரவலாக ரசிக்கப்படும் டி. வி. தொடர் நாடகங்களிலும் நகைத்திறம் மிக்க உரையாடல்களே முதன்மை பெறுவதைக் காணலாம். டி. வி. என்ற கருவிக்குரிய வடிவம் இதுவாகலாம்.

இப்சனின் பின் நாடகத்திற்கு என்றோர் புதிய வடிவமும் கலைகளுக்கெனத் தனிச் சித்தாந்தமும் தந்த பெருமை பெர்னல்ட் பிரெட்ச் (1898 – 1956) என்ற ஜெர்மன் நாடகாசிரியருக்கே உரியதாகும். அவர் ஒரு மார்க்சிய நாடகாசிரியராக இருந்தபோதும் முதலாளித்துவ நாடுகளிலும் அவர் போற்றப்பட்டார்.

அவரது நாடகங்கள் நடிக்கப்பட்டன. இவ்வாறு பரவலாக்கி அவரது புரட்சிக் கருத்துக்களை மழுப்பி விட்டனர் என்றே கூற வேண்டும்.

நாடகத்தின் கரு, உட்பொருள் மட்டுமல்ல அதன் அமைப்பு, வடிவத்திலும் அவர் புரட்சிகரமாற்றம் ஏற்படுத்தினுர். அத்தோடு மேடை, நடிகர்கள் பற்றி மட்டுமல்ல பார்வையாளனைப் பற்றியும் அவர் சிரத்தை எடுத்தார்.

பார்வையாளனை கலை உணர்வுத் தூரத்தில் (Aesthetic Distance) வைக்க வேண்டும் எனவும் சொன்னுர். பார்வையாளன், கலைகளை நுகர்வோன் கலை வடிவத்தினூடாக வாழ்க்கையின் முரண்பாடுகளை, சம்பவங்களை, கதா மாந்தர்களைக் காண்பதாக நினைவு பூர்வமாக எண்ணிக் கொள்ளவேண்டும். தவருக பாத்திரங்களுடன் ஐக்கியப் பட்டு ஒன்றிவிடப்படாது என எச்சரித்தார்.

சுருங்கக் கூறின் கலையை நுகர்வோர் அதனிலிருந்து அந்நியப் பட்ட நிலையில் இருக்க வேண்டும் என்ருர்.

மக்களே வரலாற்றை ஆக்குபவர், வீரபுருஷர்களல்ல என்ற மார்க்சின் கோட்பாட்டை முன் வைத்து வீர புருஷர்களை நாடகத் தில் நுழைப்பதையும் தவிர்த்தார். கிராமியக் கதைகளை, நடை முறைச் சம்பவங்களை நாடகமாக்கினுர்.

மேடையில் 'செட்' டுகள், மின் ஒளி விளையாட்டுகள் மூலம் மக்களைக் கவர்வதையும் தவிர்த்தார். பார்வையாளரை மயக்க மூட்டி கனவு நிலைக்கு ஈர்த்துச் செல்லாது விழிப்பு நிலையில் வைக்க வேண்டும்; மேலும் சிந்தனையூட்ட வேண்டும் என்ருர். தீவிர நடிப்பு களையும் தவிர்த்தார். அதாவது மேடையில் தோன்றி தமிழ் நாட கங்களில் நடிப்பது போல, மிகை உணர்ச்சிகளைக் காட்டி உரத்துக் கத்தும் போக்கையும் தடுத்தார்.

மேல்நாட்டு நாடக வடிவம் சிங்கள மேடையில் ஏற் படுத்திய மாற்றம் போல தமிழ் நாட்டில் ஆக்கவில்லை. சினிமா வின் தாக்கம் மேடை நாடகத்திலும் நாடக முறைகள் சினிமா விலும் பாதிப்பு ஏற்படுத்தியுள்ளன. அதற்குக் காரணம் சினிமா வின் பரவலான அறிமுகமும் ஆதிக்கமும் ஒன்று. மற்றது சினிமா உலகிற்கு நுழைய நாடக மேடை முதல் வாய்ப்பாக அமைந்துள் ளதுமாகும். இன்றைய பிரபல இந்திய நடிகர், டைரக்டர்கள் நாடக மேடையிலிருந்து திரையுலகுக்கு வந்திருப்பதைக் காணலாம்.

அ. ந. கந்தசாமி ஈழத்து மூத்த எழுத்தாளர்களில் ஒருவர். அவர் மீளா நோய்வாய்ப்பட்டு இறந்தவேளை அன்னுரது ஆக்கங்கள் சிலவற்றையாவது வெளியிட வேண்டும் என முயன்றவர்களில் நானும் ஒருவன். அம்முயற்சிகள் யாவும் பல காரணங்களால் பய னற்றுப் போயின.

15, 16 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் அன்னுரை நினைவு கூரத் தக்கதாக நூல் வெளியிட வேண்டும் என்ற முனைப்பு ஏற்பட்டது. நாட்டில் கலை, இலக்கிய விழிப்பின் ஓர் அம்சம் என்றே கொள்ள வேண்டும்.

இச் சந்தர்ப்பத்தில் 'மதமாற்றம்' என்ற இந் நாடகத்தை நானே முதலில் நினைவுபடுத்தினேன். அதற்குப் பல காரணங்கள் உண்டு.

கந்தசாமியைப் பற்றி அறிந்திருந்து, ஒரு சிலவற்றை மட்டும் படித்த காலத்தில் இந்நாடகத்தை மேடையில் ஒரு தடவை பார்க்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

அவ்வேளையே கந்தசாமியின் அறிவையும் திறமையையும் என்னால் காண முடிந்தது. ஆயினும் அன்னாருடன் நெருங்கிப் பழகும் காலம் அவரது வாழ்வின் கடைசி 2 ஆண்டுகளிலேயே எனக்கு ஏற்பட்டது.

அவரது அறிவும் திறமையும் பலதுறைகளில் ஈடுபட்டிருந்ததைக் கண்டேன். முதலாளித்துவ சமூக அமைப்பில் பேசுவது, பிறருடன் பழகி வெற்றி கொள்வது, பண்டங்களை விற்பனை செய்யும் விவேகம் ஆகியவை பற்றி மேல்நாடுகளில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. அத்தகைய நூல் ஒன்றையும் கந்தசாமி எழுதி என்னிடம் தந்தார். அவரின சிறப்பான வெளியீடாக 'வெற்றியின் இரகசியங்கள்' என்ற அந்நூலை தமிழ் நாட்டில் வெளியிட்டேன். ஆயினும் விற்பனையில் வெற்றி கிட்டவில்லை. இன்னும் எமது சமூகம் முதலாளித்துவ நிலையை அடையவில்லை என ஆறுதலடைந்தேன்.

இலங்கையில் பல மேடை நாடகங்களைப் பார்த்துள்ளேன். ஆயினும் 'மத மாற்றம்' என்ற இந் நாடகம் என்னுள் ஏற்படுத்திய மதிப்பை வேறு எந்த நாடகமும் ஏற்படுத்தவில்லை.

மேடை நாடகக் காட்சிகளை அமைக்கும் திறமையை அவர் எங்கு பெற்றூர் என்று தெரியவில்லை. இம் முதல் நாடகத்திலேயே அச் சிறப்பைக் காணக் கூடியதாக இருந்தது.

உரையாடல்களையும் கதையையும் நகர்த்திச் செல்லும் முறையில் பார்வையாளரை ஈர்த்துச் செல்லக்கூடிய உத்தியைக் கையாண்டுள்ளார். அற்புதங்களை வைத்தே மதம் வலுப்பெற முயல்கிறது. எதிர் பாராத நிகழ்ச்சிகளையும் மதவாதிகள் அற்புதமாக்கிவிடுவர். கதாநாயகி தோழியிடம் செல்லும்வேளை பத்திரிகையில் தன் தோழி பற்றிய செய்தியைப் பார்த்துவிட்டு தோழியும் கணவரும் வழிபடுகின்றனர். அவ்வேளை தோழியைக் கண்டதும் ''தேவனின் அற்புதம்'' எனக்கூறி அவளையும் நம்பவைக்கின்றனர்.

சைவ மதம், கிறிஸ்தவ மதம் பற்றிய அன்னாரின் அறிவையும் இந் நாடகத்தில் காணலாம்.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் மேலாதிக்கம் செலுத்தும் கருத்தியல் (Ideology) மதம் என்றும் முதலாளித்துவத்தில் கல்வி என்றும் நவ மார்க்சிய அறிஞர் அல்தூசர் கூறுவார். கலை, இலக்கியத்தில் கருத்தியல்கள் உடைக்கப்பட்டு விஞ்ஞான ரீதியான சிந்தனையைக் கொணர வேண்டும் என்பதும் அன்னாரின் கோட்பாடாகும். அத்தோடு இத்தகைய போக்கு பண்டைய நாடகங்கள், இலக்கியங்களில் காணமுடியாதது அவற்றின் பயனற்ற தன்மையைக் காட்டுகிறது என்பதும் அவரது கூற்றாகும்.

கந்தசாமி மதம் என்ற கருத்தியலை இந் நாடகத்தில் சாடி இருப்பது இந் நாடகத்தின் தனிச் சிறப்பாகும். அதுவும் நேரடியாகத் தாக்கவில்லை.

பார்வையாளர் எம் மதத்தவராயினும் நகைச் சுவையுடன் நாடகத்தைப் பார்ப்பர். அதன் பின்புறத்தில் மதத்தின் பொய்மையை ஆசிரியர் உடைத்தெறிவதை சிந்தனைமூலம் அறிவர்.

இராமலிங்கம் என்றோர் பாத்திரத்தை ஆசிரியர் தன் பகுத்தறிவுக் கருத்துக்களையும் தருக்க நியாயங்களையும் கூறுவதற்காக நாடகத்தில் கொண்டு வந்துள்ளார். இராமலிங்கம் என்ற பாத்திரம் கந்தசாமியே.

கதாநாயகன் அசல் கிறிஸ்தவன்; கதாநாயகி சைவப் பழம். காதலுக்காக இருவரும் மதம் மாறுகின்றனர். மாறிய மதத்தை இறுகத் தழுவி காதலைக் கைவிடுகின்றனர். இதுவே கதையின் கருவான போதும் 'மதம், காதல்' என்ற பொய்மைகளை கந்தசாமி சாடும் திறமை அபாரம்.

'மதமே பொய். இருவரும் பொய்களை நம்புகிறார்கள். ஆனால் வெவ்வேறு பொய்கள்' - கந்தசாமி இராமலிங்கம் என்ற பாத்திரம் மூலம் கூறுகிறார்.

நல்ல நாடகம் சமூக முரண்பாடுகளைக் கையாள வேண்டும். சிந்தனையில் மோதலை ஏற்படுத்துவதோடு தன்னை உணர்ந்து கொள்ள உதவ வேண்டும். நாடகம் பார்க்கும் வேளை நடிகனாக இருந்தவன் நாடகம் முடிந்ததும் புது நடிகனாக வேண்டும், வாழ்க்கையில்.

இந் நாடகம் மேடையில் நடிப்பதற்காக எழுதப்பட்டபோதும் படித்துச் சுவைப்பதற்குமாக அமைந்திருப்பது அதன் தனிச் சிறப்பாகும். புதிதாக நாடகம் எழுதுவோருக்கும் காட்சி அமைப்பையும் கருத்தின் ஆழத்தைக் கையாளும் முறையையும் கற்பிக்கத் தக்கதாக இந் நாடகம் உள்ளது. இத்தகைய நாடகங்கள் அரிதே.

# சோஷலிச சமுதாயம்

★ 'தியாகு'

முதலாளித்துவத்தின் தோற்றத்தோடு இரு புதிய வர்க்கங்கள் சமூகத்தில் தோன்றின என முன்னர் கற்றோம். (1) இயந்திரங்களை யும் பிற உற்பத்திச் சாதனங்களையும் மூலதனத்தையும் கொண்ட முதலாளிகள். (1) அவற்றில் தமது உற்பத்திச் சக்தியை விற்று கூலி பெற்று வாழ கிராமங்களிலிருந்து வெளியேறி வந்த பாட் டாளிகள்.

இப்புதிய வர்க்கங்கள் ஒன்றுதிரண்டே முதலாளிகளின் ஆதிக் கத்திற்காக மன்னர், நிலப்பிரபுக்களின் ஆட்சியை வீழ்த்தினர். ஆயினும் இவ்விரு வர்க்கங்களும் நட்பானவரல்ல; பகைமை கொண்ட வர்க்கங்கள். ஒன்றையொன்று அழிக்க முயலும் வர்க்கங் கள். காரணம்: பாட்டாளிகளின் உபரி உழைப்பை அபகரித்து முதலாளிகள் மேலும் மேலும் மூலதனமாக்கி, யந்திர மயமாக்கி பாட்டாளிகளை அடிமைப்படுத்த முயல்வதாகும். சமூக உற்பத்தி யில் ஈடுபட்டபோதும் தன் இலாபமே முதல் நோக்காகக்கொண்ட உற்பத்தியே நடைபெறும்.

இப்போக்கால் பாட்டாளிகள் பெருகுவதோடு மக்கள் தேவை யைப் பூர்த்தி செய்ய முடியாதபடியான உற்பத்தி நடைபெறுகிறது. இதை உணர்ந்து விழிப்பு நிலைபெற்ற பாட்டாளிகள் ஒன்றுதிரண்டு தனி உடைமையாக இருந்த உற்பத்திச் சாதனங்களை முதலாளி களிடமிருந்து பறித்தெடுத்து உற்பத்தியைத் தமது கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவருகின்றனர். இம்மாற்றம் ஆயுதம் ஏந்திய வன் முறைப் புரட்சிமூலமே சாத்தியமாகும். முன்னைய சமுதாய மாற் றங்கள், உற்பத்தி உறவு மாற்றங்கள் (அடிமை, நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம்) ஆயுதப்போராட்டமின்றியும் நடைபெற்றன.

முதலாளித்துவ அமைப்புள்ளேயே அதை அழிக்கும் உள்ளமைப்பு களையும் ஏற்படுத்திவிடுகிறது என்பதை முன்னரும் கண்டோம்.

தொழிலாளர்கள் தற்காப்பிற்காக, கேடயமாக சங்கம் அமைப் பது மட்டுமல்ல மார்க்சிய உணர்வு பெற்று ஆயுதம் ஏந்திய புரட்சி மூலம் சோஷலிசப் புரட்சியை நடாத்துகின்றனர்.

ரஷ்யாவில் லெனின் தலைமையில் 1917ல் அக்டோபர் புரட்சி நடந்தது. மார்க்சின் சித்தாந்தத்தை முதன்முதலில் நடைமுறைப்

படுத்திய பெருமை லெனினையே சாரும். அதைத் தொடர்ந்து கிராமப்புறப் பாட்டாளிகளையும் தொழிலாளர்களையும் அணி திரட்டி மாவோ தலைமையில் சீனாவில் சோஷலிச உற்பத்தி முறையை ஏற் படுத்தும் நோக்கோடு புதிய ஜனநாயகப் புரட்சி நடைபெற்றது.

கியூபா, நிக்கராகுவா, எல்-சல்வடோர் ஆகிய நாடுகளிலும் புரட்சிகள் நடைபெற்று சோஷலிசத்தை கட்டும் முயற்சிகள் நடை பெறுகின்றன. உலக குடித்தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் வாழும் பகுதிகளில் சோஷலிச சமூக உற்பத்தி ஆதிக்கம் பெற்று வருகிறது.

முதலாளித்துவத்தில் நிலைபெற்ற கூலி உழைப்பு, கூலி அடிமை முறை சோஷலிசத்தில் ஒழிக்கப்படுகிறது. முதலாளித்துவத்தில் உழைப்புச்சக்தி பண்டமாக்கப்பட்டு லாபத்திற்காக விற்கப்படுகிறது. சோஷலிசத்தில் உழைப்புச்சக்தி கூட்டாக உழைக்கும் மக்களிடையே பகிரப்பட்டுவிடுகிறது.

சோஷலிச சமூகத்தில் சாதி, மத, இன நிறபேதம் அற்றுவிடு கிறது. இலாபம், கடன், வட்டி, குத்தகை ஆகிய உபரி அபகரிப்புச் சுரண்டல் முறைகள் இருக்காது. சமூகத்தில் பகைமை உறவுகள் இருக்கமுடியாது. ஆகவே உற்பத்தி சமூகமாக இடம்பெறும். சமூ கத் தேவையை முதன்மையாகக் கொண்ட திட்டமிட்ட உற்பத்தி நடைபெறும். பண்டப் பரிமாற்றமும் விநியோகமும் நீதிப்படி நடைபெறும்.

முதலாளித்துவத்தில் லாப நோக்கே முதன்மை பெறுவதால் திட்டமிட்டபடியான உற்பத்தி நடைபெறுவதில்லை. குழந்தைகளுக் குப் பால்மா உற்பத்தி செய்யாது அதிகம் லாபம்தரும் முகப் பவுடரை எல்லா முதலாளிகளும் ஒரேவேளையில் உற்பத்தி செய்வர். பால்மாவுக்கும் கோதுமைக்கும் தட்டுப்பாடு இருக்கும்போதும் முகப்பவுடர் தாராளமாக சந்தைகளில் கிடைப்பதை நாம் அனு பவத்திலேயே காண்கிறோம்.

சோஷலிச சமுதாயத்தில் அனைவரும் உற்பத்தியில் ஈடுபடும் வாய்ப்பு அளிக்கப்படும். உழைக்காதவர்களுக்கு உண்ண உரிமை கிடையாது. இன்று சோம்பேறிகளாக, ஆடம்பரத்தில் வாழும் முதலாளிகளும் உற்பத்தியில் ஈடுபடுவர். அனைவருக்கும் உணவு, உடை, வீடு, நீர் ஆகிய அடிப்படைத் தேவைகள் தவறாது கிட்டும்.

இன்றைய ஏற்றத்தாழ்வுள்ள சமுதாயத்திலும் பார்க்க சோஷ லிச சமுதாயம் ஏற்றமான, சமத்துவமான, சமநீதி வழங்கும் சமூகமாகும்.

பாட்டாளிகளின் சர்வாதிகாரம் கொண்ட சோஷலிச சமுதாயத்தைப பல படிகளாகக் கட்டுவதிலுள்ள பல பிரச்சினைகளை புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்கள் எதிர்நோக்குகின்றன.

உற்பத்திச் சாதனங்களை புரட்சிமூலம் பறித்தெடுத்தபோதும் மக்களின் கருத்தியல்களை, சிந்தனையை சோஷலிசத்தை நோக்கித் திருப்புவதில் பல சிரமங்கள் உள்ளன. பரம்பரையாக சுயநலம் மிக்க சமுதாயங்களில் வாழ்ந்த மக்கள் சுயநலமற்ற புதிய சமூகத்தை ஏற்றுக்கொள்வதில் சிரமம் இருக்கவே செய்யும்.

மொழி, இன, மதம், குடும்ப உறவு போன்றவற்றின் பிடியிலிருந்து விடுபடுவதிலுள்ள சிரமங்களைக் காண்கிறோம். அடுத்து சுற்றிவர உள்ள முதலாளித்துவ, ஏகாதிபத்தியங்களின் தாக்கங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. முதலாளித்துவத்தின் நுகர் பண்டங்களும் மக்கள் தொடர்பு சாதனங்களும் சோஷலிசம் கட்டும் நாடுகளைப் பயமுறுத்திக் கொண்டிருப்பதையும் காண்கிறோம்.

எத்தனை முதலாளித்துவத்தினதும் கருத்தியல்களினதும் தாக்கம் ஏற்பட்டபோதும் சோஷலிச உற்பத்தி முறை ஆதிக்கம் பெற்ற புரட்சிக்குப் பிந்திய புதிய சமுதாயங்கள் வளர்ச்சிப் போக்கிலேயே முன்னேறி வரும் என்பது தவிர்க்கமுடியாத விஞ்ஞான நியதியாகும்.

## தோட்டத்துப் பெண் அடிமைகள்

பெருந்தோட்ட நிர்வாகிகளும் அங்குள்ள சமூக அமைப்பும் பெண்கள் மேல் இருமடங்கோ அல்லது பல மடங்கோ வேலைப் பளுவைச் சுமத்துகிறது.

1. உழைப்பு என்று கருதப்படாது பெண்களின் வழமையான வேலை என பல திணிக்கப்படுகின்றன.
2. வீட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் வேளை பெண்களே அதிகம் உழைக்க நேரிடுகிறது.
3. ஆண்மகனுக்கும் குழந்தைகளுக்கும் உணவில் முதலுரிமை வழங்கப்படுவதால் பெண்களிடை போஷாக்கின்மை அதிகமாகிறது.
4. வீட்டுவேலை 'வேலையல்ல' என்ற பொதுப் பார்வையில் பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள்.
5. பெண்களின் நேரம் பூராவும் உழைப்பிலேயே முடக்கப்படுவதால் அவர்கள் மீளமுடியாத அடிமைத்தனத்தில் உழல நேரிடுகிறது.

- டாக்டர் ரெச்சல் சூரியன்.

# கலை, இலக்கியத்தின் நோக்கங்களும் பணியும் - 6

- மாதவன் -

## 18. கலை, இலக்கியம் என்ற கருத்தியல்

கலை, இலக்கியங்கள் மேல்மட்ட அமைப்பைச் சார்ந்தவை. அடிப்படை அமைப்பான பொருள் உற்பத்திக்குச் சேவை செய்பவை; அரசு யந்திரத்தோடு பிணைந்தவை.

மேல்மட்ட அமைப்பை அரசியல், சட்டம் சார்ந்தவை, கருத்தியல்கள் என மார்க்ஸ் சுட்டிக் காட்டினர்.

இவற்றில் அரசியல், சட்டம் சார்ந்தவை அரசு யந்திரத்தோடு பிணைந்த வன்முறை வடிவங்களாகும். கருத்தியல்கள் அரசு யந்திரத்தோடு பிணைந்த வன்முறையற்ற வடிவங்களாகும்.

கருத்தியலை அல்தூசர் பின்வருமாறு சுருக்கிக் கூறுவார்:

மனிதர்களுக்கும் அவர்களது உலகுக்குமிடையில் உள்ள யதார்த்த உறவு; நினைவிலி மனதினது உறவின் பிரதி பிம்பவடிவம்; விஞ்ஞான ரீதியற்ற பொய்மையானது; ஆயினும் தர்க்க ரீதியான தோற்றமளிக்கலாம். ஒவ்வொரு சமூக அமைப்பிலும் கருத்தியல் மறையாது நிலவும்.

மனிதர்கள் கருத்தியலின் 'நபர்கள்' என்பர். கருத்தியல்கள் விழிப்பு நிலையையே கட்டுப்படுத்துகிறது.

மதம், கல்வி, குடும்பம், சாதி, அரசியல் கட்சிகள், சட்டம், மக்கள் தொடர்பு சாதனங்கள் போன்ற பல்வேறு கருத்தியல்கள் போன்றதே கலை, இலக்கியங்களுமாகும்.

கருத்தியல்கள் பொருண்மை கொண்டதாகக் கூறுவதில் தவறில்லை. மதப் பிடியில் அகப்பட்டோர் தம்மை மறந்து உடலை அசைத்து வணங்குவதையும், குடும்பத்தவருக்கு விழிப்புநிலை இன்றி மரியாதை செலுத்துவதையும், அரசியல் கட்சி சார்ந்தோர் கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் செய்வதையும் காண்கிறோம். அதுபோலவே கலை, இலக்கியத்தில் ஈடுபடுவோர் மெய்மறந்து கைதட்டி ஆர்ப்பரிப்பதையும் இசையில் ஈடுபட்டோர் சூழலை மறந்து இசைக்கேற்ப ஆடுவதையும் பார்க்கிறோம்.

மற்றைய கருத்தியல்கள் போன்று கலை, இலக்கியமும் அரசு யந்திரத்துடன் பின்னிப் பிணைந்ததே. ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்யும். அதனால் அரசால் பேணப்படும் உற்பத்தி உறவைக் கட்டிக் காப்பதாகவே கலை, இலக்கியமும் அமையும்.

கலை, இலக்கியம் அரசியலுக்கு, அரசு யந்திரத்திற்கு அப்பாற் பட்டவை எனக் கூறுவது மற்றோர் கற்பனையே.

**நிலப்பிரபுத்துவத்தில்**

நிலப்பிரபுத்துவ காலகட்டத்தில் மன்னர்களையும் நிலப்பிரபுக்களையும் அவர்களுக்குப் பயன்பட்ட மதம் சார்ந்தே கலை, இலக்கியங்கள் அனைத்தும் ஆக்கப்பட்டதை இன்றும் எளிதில் காணக் கூடியதாக உள்ளது. பழந்தமிழ் இலக்கியம் என்று இன்றும் நாம் போற்றுவது அவற்றையே கூறி நிற்கின்றன.

மன்னர்கள், நிலப்பிரபுக்களைப் போற்றிப் புலவர்கள் பாடிப் பரிசு பெற்றனர்; அவ்வர்க்கத்தவர்கட்கு வேண்டிய போர், வீரம், ஒழுக்க வரம்புகளை பிரச்சாரம் செய்தனர்.

புலவர்களால் ஆக்கப்பட்ட வீரபுருஷர் யாவரும் மன்னர் அல்லது நிலப்பிரபுவாகவே இருப்பர்.

நிலமுடையவர்களே அன்று மனிதர்களாகக் கருதப்பட்டனர். அவர்களுக்காகவே கோவில்களும் கலை, இலக்கியங்களும் ஆக்கப்பட்டன.

அடிமைப்பட்ட உழைக்கும் மக்கள் சிறுதெய்வ வழிபாட்டில் இறங்கி ஆறுதல் பெற்றனர். தமக்கென கிராமிய கலைகளையும் வாய்மொழி இலக்கியங்களையும் ஆக்கிக் கொண்டனர். அனைத்திலும் உயர் குடிமக்களைப் பின்பற்றி வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்குட்பட்டே இவரும் வாழநேரிட்டது.

இடையிடை உயர் குடியினருக்கு எதிராகக் கொதித்தெழுந்த போதும் ஈவிரக்கமின்றி அடக்கி ஒடுக்கப்பட்டனர். வள்ளுவர் போன்ற சில புலவர் உயர் வர்க்கம் சார்ந்து நின்றபோதும் துன்பப்படுவோருக்காக 'அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும்படை' போன்று சமரசம் பேசினர்.

அடிமை உழைப்பில் கைத்தொழிலுற்பத்தி வளர்ச்சியடைந்து வாணிபம் விரிவடைய அறநெறிகள், ஒழுக்க வரம்புகள் வற்புறுத்தப் பட்டன.

மக்கள் நிலைபெற்று விவசாயம் வளர்ச்சி பெற்று மன்னராட்சிகள் நிலைபெற மக்களுக்குப பக்திநெறி வலியுறுத்தப்பட்டது. வானளாவிய கோவில்கள் கட்டப்பட்டன. உடையவரதும் இல்லாதவரதும் பாலுணர்வைத் தணிக்கும் முறையான சிற்பங்கள் கலைவடிவங்களாக கோவில்களை அலங்கரித்தன.

உழைக்கும் மக்களை கருத்தியல் மூலம் அடக்கி ஒடுக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றே வந்தது.

பிற்காலத்தில் உழைக்கும் மக்களிடையேயும் பிரபல்யமடைந்த கூத்துகள், பாட்டும் உரையாடலும் இணைந்த நாடகங்கள் அனைத்தும் இப்பணியையே செய்தன. மக்கள் தமது துன்பத்தோடு உண்மைக்காக துன்புற்ற அரிச்சந்திரன், சந்திரமதியின் இன்னலோடு ஒன்றிணைந்து மயான காண்டத்தில் அழுதனர். விதியின் வலியையும் சனி பகவானின் நியதியையும் நளன் சரித்திரத்தில் கண்டு கலங்கினர்.

கண்ணகி, சாவித்திரி, அனுசூயா ஆகிய வீர மகளிர் கற்புக் காத்துப் போராடிய இன்னல்களுடன் ஐக்கியப்பட்டனர்.

அன்றைய கருத்தியல்களை மீறிய கதைகளையோ பிற கலை, இலக்கியங்களையோ எவரும் கற்பித்ததில்லை.

**இன்றைய நிலை**

முதலாளித்துவம் பண்ட உற்பத்தியைப் பரவலாக்கியதோடு பண்ட வெறியையும் ஏற்படுத்தியது. இதற்கு மக்கள் தொடர்பு சாதனங்களான நாளிதழ்கள், சஞ்சிகைகள், சினிமா, ரேடியோ, டி. வி. ஆகிய சாதனங்களையும் பயன்படுத்துவதோடு கலை, இலக்கியங்களையும் மலினப்படுத்தி இவற்றின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. கலை, இலக்கிய உற்பத்தியாளரும் கூலி அடிமைகளாக முதலாளித்துவத்தை நிலைநிறுத்தும் சேவையில் ஈடுபட்டனர். கலை, இலக்கியங்கள், மேலும் வலுவடைந்த கருத்தியல்களாக்கப்பட்டது மட்டுமல்ல, முதலாளித்துவத்தின் விற்பனைப் பண்டங்களுமாகின.

முதலாளித்துவத்தின் 'நவீனம்' என்பது தொழில் நுட்பத்திலே அல்லாது முற்போக்கான உள்ளடக்கத்திலே அல்ல; பொழுது போக்கு என்ற கொள்கையுடன் சிந்தனையைத் திசை திருப்பும் நோக்கிலேயே வளர்க்கப்படுகிறது.

அண்மையில் ரேமண்ட் வில்லியம்ஸ் என்ற அறிஞர் இன்று முதலாளித்துவம் கலைகள் மூலம் 'நவீனம்' என்ற பெயருடன் உற்பத்தி செய்து தரும் வீரபுருஷன் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

அந்நியப்பட்டவன், குரூரமானவன், துன்புறுத்துவதில் இன்பமடைபவன், குறிக்கோள் அற்றவன் - திகிலூட்டும் திரைப்படங்களின் நட்சத்திரமாக, வீர புருஷனாக தயாரிக்கப்படுகிறான்.

இக் கோரமான நிலையிலிருந்து விடுபட வேண்டும்; கருத்தியல் என்ற கனவு நிலையிலிருந்து, விழிப்பு நிலையான விஞ்ஞான நோக்கை ஏற்படுத்தும் கலை இலக்கிய உற்பத்தி, விமர்சனத்திற்கு இட்டுச் செல்லும் வழிகள் எவை? இவற்றை நாம் வகுத்துக் கொள்ளாவிடின் முதலாளித்துவத்தின் மலினப்படுத்தப்பட்ட விற்பனைப் பண்டமாகவே கலை, இலக்கியம் இன்றுபோல் என்றும் நிலைத்துவிடலாம்.

# கேள்வி ? பதில் !

'வேல்'

கே: பிரஞ்சுப் புரட்சியை முதலாளித்துவ நாட்டுத் தலைவர்களே பாரிசுக்குச் சென்று கொண்டாடினார்களே ஏன்?

க. சின்னத்தம்பி, யாழ்.

ப; அது ஓர் முதலாளித்துவப் புரட்சி என்பதனாலேதான்! இவர்கள் யாவரும் புரட்சிக்கு சாவீட்டுச் சடங்கு செய்வதாகவே எண்ணிச் சென்றனர். புரட்சி என்பது நீண்ட வரலாறுடையது என்பதை இவர்கள் தற்காலிகமாக மறந்து விடுகின்றனர்.

கே; திருவள்ளுவர் இந்துவா, சமணரா, பௌத்தரா? உங்கள் முடிவு என்ன?

இ. சுப்பையா, கொழும்பு.

ப; வள்ளுவரைப் பற்றி ஆராய்வதை விட்டு எம் கையிலே கிடைக்கும் குறள் கூறுவதை நாம் காண்பதே முறையாகும். குறள் சமரசம் கூறும் இலக்கியமாகும். சமயப் பற்றுடையோர் ஒவ்வொருவரும் தம் மதவாதி என குறளையும், அதன் ஆசிரியரையும் பற்றிக் கூறிப் பெருமைதேட முயல்கின்றனர். தமிழக ஆராய்ச்சியாளர் குறள் சமண மதம் சார்ந்தது எனவே முடிவு செய்துள்ளனர். சைவ மதம் என்றும் கொல்லாமையையோ, அகிம்சையையோ வலியுறுத்தவில்லை. குறள், 'ஒன்றாக நல்லது கொல்லாமை' என்று கூறும். சமணம் உயிர்க் கொலையில், நடைமுறைக்குச் சாத்தியமற்ற முறையில் மிக இறுக்கமாக நின்றது. பௌத்தம் அதைத் தளர்த்தியதாலேயே கடல் கடந்தும் பரவ முடிந்தது. கொல்லாதே, பிறர் கொன்றதை உண்ணலாம் என்ற விதமாக மனித நடைமுறைக்கு வழி விட்டது. சமண மதக் கோட்பாட்டை குறள் பின்வருமாறு கூறும். 'தினப் பொருட்டால் கொல்லாது உலகெனில் யாரும் விலைப் பொருட்டால் ஊன் தருவாரில்'. எவரும் ஊன் உண்ணுவிடின் ஒருவரும் உயிர்க் கொலை செய்யப்போவதில்லை.

கே; பெண்கள் பெரும்பாலும் பிற்போக்கான அரசியலையே ஆதரிக்கின்றனர் என்பேன் நான்.

அன்ரன் செல்வா, நுாரளை

ப; சமூகத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் உற்பத்தி முறையிலே வேறுபாடு உள்ளது; புற உழைப்பில் கிடைக்கும் கூலி ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களுக்கு 60வீதம் மட்டுமே கிடைக்கிறது; பெண்களுக்கு வீட்டுப் பணிகள் பலவுண்டு; கிடைக்கும் பணத்தில் சிக்கனமாக குடும்பம் நடத்துவது உட்பட பிற நுகர்வு அனைத்திலுமே வேறுபாடு உள்ளது. அதிகம் உழைத்தபோதும் ஆணினத்திலும் குறைந்தவர்களாகவே சமூகத்தில் கருதப்படுகின்றனர். இச் சூழலில் அரசியலிலும் அவர்கள் வேறுபடுவதில் வியப்பில்லை. பெரும்பாலும் பிற்போக்கான அரசியலை அவர்கள் ஆதரிக்கலாம்.

கே: முதலாளித்துவம் சார்ந்த கலை, இலக்கியம் என்பதை எவ்வாறு நாம் காணலாம்?

க. சின்னராசா, கண்டி

ப; முதலாளித்துவம் சார்ந்த கலை, இலக்கியங்களை ஆக்குபவர் பெரும்பாலும் வகை மாதிரியான மாந்தர்களையும் சம்பவங்களையும் தேர்வதில்லை. எங்காவது விசித்திரமாகத் தோன்றுபவர்களையும், சம்பவங்களையும் பொதுமையாகக் காட்ட முயல்வர். அவற்றை தம் அனுபவத்தில் கண்டவை எனவும் பலர் நீதிப்படுத்த முயல்வர். இது அனுபவ வாதமாகும். கலை, இலக்கியத்தின் மூலம் விஞ்ஞான உண்மைகள் வெளிப்படின் அதுவே போற்றப்பட வேண்டியதாகும்.

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர் மாதம் ரூ. 2500 ஆகக் குறைந்த ஊதியம் வேண்டி வேலை நிறுத்தம் செய்தனர். இன்றைய வாழ்க்கைச் செலவை நோக்கும்போது இக்கோரிக்கை நியாயமானதே. ஆனல் இவ் வேலை நிறுத்தம் வழமையான தொழிற் சங்கச் செயலாக நடைபெறவில்லை. வேலை நிறுத்தத்தை எதிர்த்த 150 ஊழியர் சுட்டுக் கொல்லப்பட்டனர். - காமினி, திசாநாயக்கா நாடாளுமன்றத்தில் 24-8-89.

# இலங்கையின் ஆளும் வர்க்கம்-
# சில குறிப்புகள்

— அழகன் —

நாட்டின் ஆளும் வர்க்கத்தின் (Ruling Class) தேவை, நலனை ஒட்டியே அரசியல், சட்டம் சார்ந்தவை அமைக்கப்படுகின்றன. இவை வன்முறை வடிவங்கள், அத்தோடு வன்முறையற்ற கருத்தியல்களும் கட்டப்படுகின்றன.

தனிச் சொத்துடைமையை உறுதிப்படுத்தும் சமுதாயம்; அங்கு உற்பத்திச் சாதனங்களைக் கொண்டவர்களே ஆதிக்கம் செலுத்துவர்.

இலங்கையின் ஆதிக்கம் செலுத்தும் உற்பத்திகள் எவை? அவை எவரது கட்டுப்பாட்டில் இயங்குகின்றன?

ஆளும் வர்க்கத்தின் பொருளாதாரம், அரசியல், கருத்தியல் யாவை?

இவற்றுக்கு விடைதேடுவதன் மூலம் ஆளும் வர்க்கத்தவரையும் அன்னாரது அரசியல், கருத்தியல் போக்குகளையும் இனம் காணமுடியும்.

(ஆளும் வர்க்கம் என்ற சொல்லை ரயிட் மில்ஸ் (Wright Mills) போன்ற சில அறிஞர்கள் ஆதிக்கமுள்ள உயர் வகுப்பினர் (Power Elite) எனக் கூறுகின்றனர். Ruling Class என்பதில் Class (வர்க்கம்) என்பது பொருளாதாரம் சார்ந்தும் Ruling (ஆட்சி) என்பது அரசியல் சார்ந்தும் பொருள்படுவதாக அவர்கள் கருதுகின்றனர்)

உற்பத்தி, விநியோகம், சேவைகளில் ஈடுபட்டிருக்கும் ஆதிக்கமுள்ள உயர்வகுப்பினரை நாம் மூன்றாக வகுக்கலாம்.

1. உள்நாட்டுக் கம்பனிகளும் தனியாரும்.
2. சர்வதேசக் கம்பனிகள், கூட்டுக் கம்பனிகள்.
3. அரசும் அதிகாரிகளும்

(1) உள்நாட்டுக் கம்பனிகளும் தனியாரும்

இவர்கள் பரவலான உற்பத்தி, விநியோகம் சேவைகள் அனைத்திலும் ஈடுபட்டுள்ளனர். இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 5000க்கு மேற்பட்ட கம்பனிகளின் மொத்த மூலதனம் ரூ. 2500 கோடி வரை

என மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. நாட்டின் மொத்த மூலதனத்தில் இது சிறிதளவே ஆகும். இக் கம்பனிகள் புடவை, தைத்த ஆடைகள், பிளாஸ்டிக், அலுமினியம் பொருட்கள், சோப்பு, பவுடர், குடிபானம், றப்பர், தோல், மர உற்பத்திகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளன. இவை ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம், கமிஷன் ஏஜெண்டுப் பணிகளிலும் செயலாற்றுகின்றன. நடுத்தர ஓட்டல்கள், பண்ட விற்பனைகள் ஆகிய சேவைகளிலும் ஈடுபட்டுள்ளன.

பெருந்தொகையான தனியார், சிறுபண்ட உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலும் விவசாயம், மீன்பிடித் தொழில்களே.

தேசிய முதலாளிகள் என்ற தகைமை பெற்றவர்களை எந்தச் சமூகத்திலிருந்தும் கூறுவதற்கு எவருமில்லை. 'பணக்கார முதலாளிகள்' எனக் குறிப்பிடத்தக்கவர் மட்டும் உள்ளனர். ஞானம், நவலோக முதலாளி, தாசா, குணரத்தினம், சண்முகம், மகாராஜா போன்றவர்களே இக்குழுவில் அடங்குவர். இவர்களும் வெளிநாட்டவர்களோடு இணைந்து கூட்டாகவே தொழில்புரிகின்றனர்; தரகு முதலாளிகளாகவே உள்ளனர்.

நில ஆதிக்கம் உள்ள நிலப் பிரபுக்களாகக் குறிப்பிடத்தக்கவரும் அரிதே. சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் (1970-77) நில உச்சவரம்புச் சட்டம் நிலப் பிரபுத்துவத்தை பலமிழக்கச் செய்துவிட்டது. தேயிலை, றப்பர் தோட்டங்களில் தனியாருக்கு இருந்த ஆதிக்கமும் குறைக்கப்பட்டுவிட்டது.

2. சர்வதேசக் கம்பனிகள்

(i) இவை பெரும்பாலும் நுகர்பண்ட உற்பத்தியிலும் மருந்து வகையிலுமே ஈடுபட்டுள்ளன. இவற்றிலேயே விரைவில் பணம் திரட்ட முடியும். இக்கம்பனிகளில் பிரதானமானவை:

லிவர் பிரதேர்ஸ், ஐ சி ஐ (C I C), சிலோன் ரூபாக்கோ, நெசிலே, பாட்டா, சிலோன் பல்ப் அன்ட் எலட்டிக்கல்ஸ், சிலோன் ஒட்சிசன், ரெக்கிட்அன்கொல்மன்கொம்பனி, சிங்கர், வார்னர்கட்நட், கிளாஸ்கோ, பைசர் முதல் பாயர் ஈறன மருந்துக் கம்பனிகள் மற்றும் சுதந்திர வர்த்தக வலயத்தில் தைத்த ஆடை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள நூற்றுக் கணக்கான கம்பனிகளைக் குறிப்பிடலாம்.

சில இலங்கைப் பெயரை முதலாகக் கொண்டபோதும் அவை சர்வதேசக் கூட்டுக் கம்பனிகளே. தொழில்நுட்பம், நிர்வாகம், லாபம் அனைத்தையும் அவர்களே தீர்மானிக்கின்றனர்.

(ii) தேயிலைச்சந்தையில்ஆதிக்கம் செலுத்தும் கம்பனிகளில் புரூக் பொண்ட், லிப்டன்ஸ் குறிப்பிடத்தக்கவை.

(iii) நிதி நிறுவனங்களாக உலகின் பிரபல வங்கிகள் யாவும் தமது கிளைகளை இலங்கையில் நிறுவியுள்ளன.

(iv) சேவைகளில் 5 நட்சத்திர ஓட்டல்கள் யாவும் (இன்ரகொன்டினென்டல், ஒபரோய், தாஜ், ஹில்டன், மெரிட்டியன், ஹொலிடே இன் முதலியன) வெளிநாட்டுக் கம்பனிகளே.

3. அரசும் அதிகாரிகளும்

தேசியமுதலாளிகளிடம் போதிய முதலீட்டு வசதி இல்லாததாலும் நஷ்டமேற்பட வாய்ப்புள்ள பெருந்தொழில்களில் வெளிநாட்டார் முதலீடு செய்யத் தயங்குவதாலும் அரசு, அதிகாரிகள் மூலம் இலங்கையின் பாரிய உற்பத்தி, ஏற்றுமதி இறக்குமதி, விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது. வெளிநாட்டு, உள்நாட்டுக் கடன்கள் பெறும் வாய்ப்பும் அரசுக்கு உள்ள தால் அரசு அதிகாரத்துவமூலதனம் முதல்தர மூலதனமாக இலங்கையில் வளர்ந்துள்ளது. அரசின் நேரடியான ஈடுபாட்டுடனும் 130க்கு மேற்பட்ட கூட்டுத்தாபனங்கள் மூலமும் உற்பத்தி விநியோகம் நடைபெறுகிறது. குறிப்பிடத்தக்க உற்பத்திகள்:

புடவை, சீமேந்து, பேப்பர், தேயிலை, உருக்கு, பெற்றோலியம், மரம், உப்பு, பால், தோல், குடிவகைகள், டயர், யூரியா, மட்பாண்டம், சீனி, கனிப்பொருட்கள் முதலியன.

சேவைகள்: பயண சரக்கு, பஸ் வண்டிப்போக்குவரத்து, கப்பல், அஞ்சல், தொலைபேசி, ஒளி, ஒலிபரப்பு, மின்சாரம், எண்ணெய் முதலியன.

நிதி நிறுவனங்கள் : இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மத்திய வங்கி, சேமிப்பு வங்கிகள், ஈட்டு, கிராமிய வங்கிகள் முதலியன.

இலங்கையின் மிகப்பெரிய மூலதனம் அரசாங்க அதிகாரத்திலேயே உள்ளது. வெளிநாட்டுக் கடனாக ரூ 17,000 கோடி வரையிலும் உள்நாட்டுக் கடனாக ரூ. 23,000 கோடியும் அரசினால் பெற்று முதலீடு செய்ய முடிந்தது. ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளின் தரகர்களாகவே அரசு செயல்படுகிறது. உலக வங்கியே இலங்கையின் பொருளாதாரத்தை மேற்பார்வையிட்டு வரவு செலவுத் திட்டத்தைக்கூட கண்காணிக்கிறது. இதனாலேயே தரகு அதிகாரத்துவ மூலதனமே ஆதிக்கம் செலுத்தும் மூலதனமாக அரசியலார் அதிகாரிகளின் கைகளில் உள்ளது எனக் கொள்வோம். (தொடரும்)

# அரிய நூல்கள் மீண்டும் கிடைக்கும்!

| | | | |
|---|---|---|---|
| 1. | போர்க்கோலம் | செ. கணேசலிங்கன் | 14.25 |
| 2. | மண்ணும் மக்களும் | ,, | 10.50 |
| 3. | அயலவர்கள் | ,, | 45.00 |
| 4. | பொய்மையின் நிழலில் | ,, | 37.50 |
| 5. | அந்நிய மனிதர்கள் | ,, | 13.50 |
| 6. | வதையின் கதை | ,, | 15.75 |
| 7. | கலையும் சமுதாயமும் | ,, | 11.25 |
| 8. | குந்தவிக்குக் கடிதங்கள் | ,, | 18.00 |
| 9. | மான்விழிக்குக் கடிதங்கள் | ,, | 16.50 |
| 10. | சிறுவர்களுக்கான சிந்தனைக் கதைகள் | ,, | 24.00 |
| 11. | அபலையின் கடிதம் | ,, | 3.75 |
| 12. | சொந்தக்காரன் | பெனடிக்ற் பாலன் | 13.50 |
| 13. | மரணத்திற்குப் பின் | பொ. சங்கரப்பிள்ளை | 45.00 |
| 14. | சைவசித்தாந்தம் | ,, | 30.00 |
| 15. | மக்கள் தொடர்பு சாதனமும் மகளிரும் | சந்திரிகா சோமசுந்தரம் | 21.00 |
| 16. | மதமாற்றம் - நாடகம் | அ. ந. கந்தசாமி | 30.00 |

**விற்பனையாளர்க்கு கழிவு உண்டு. வி. பி. பி. ஏற்கப்படும்.**
**முன்பணம் அனுப்புவோருக்கு பார்சல் செலவு இனம்.**

## குமரன் புத்தகசாலை

**201, டாம் வீதி, கொழும்பு - 12 தொலைபேசி: 421388**

KUMARAN - 70 (01-10-1989) 201, DAM STREET, COLOMBO-12.

# குமரன் குரல்

சோஷலிசத்திற்கு எதிரான பிரச்சாரத்தை முதலாளித் துவத்தின் ஊதுகுழல்களான மக்கள் தொடர்பு சாதனங்கள் யாவும் மீண்டும் முழக்கமிடத் தொடங்கியுள்ளன. முதலாளித்துவம் சமூகப் பிரச்சினைகளை யெல்லாம் தீர்த்து விட்டதா? 'தியாகு' வினு எழுப்பி விடைகூறுகிறார்.

'இக்கரைக்கு அக்கரை பச்சை' என மக்கள் இடம் பெயர்வது வரலாற்றுக் காலம் தொட்டு நடைபெறு கிறது. கிழக்கிலிருந்து மேற்கு ஜெர்மனிக்கு இடம் பெயரும் சில ஆயிரம் குடும்பங்களை முன்வைத்து சோஷ லிசம் தோற்றுவருகிறது என்ற புலம்பலுக்கு 'மதி' விடை பகர்கிறார். கலை, இலக்கியம் என்ற கருத்தியலை வரலாற் றுப் பொருள் முதல்வாத நோக்கில் மாதவன் தன் தொடர் கட்டுரையில் ஆராய்கிறார்.

இலங்கையில் இன்று பொருளாதாரத்திலும் சமூக உறவுகளிலும் ஏற்பட்டுள்ள படுமோசமான நிலைகளின் அடித்தளங்களை 'அழகன்' ஆராய முற்பட்டுள்ளார். இலங்கையின் ஆளும் வர்க்கத்தை, ஆதிக்கமுள்ள உயர் வகுப்பினரை இனங்காணுவதன் மூலம் காரணங்களை அறிந்து கொள்ளலாம் என்ற முடிவுடன் முதற்கட்டுரையை ஆரம்பித்துள்ளார்.

சோஷலிச சமுதாயம் பற்றி இவ்விதழ் விளக்குகிறது. இலங்கையின் முதுபெரும் எழுத்தாளராகத் திகழ்ந்து மறைந்த அ. ந. கந்தசாமியின் 'மதமாற்றம்' என்ற நாடக நூலின் வெளியீடு அண்மையில் கொழும்பில் நடை பெற்றது. அந் நூலுக்கு எழுதப்பட்ட சிறப்புரை இங்கு வெளியிடப்பட்டுள்ளது. அக்கட்டுரை நாடகத்தின் வரலாற்றையும் இன்றைய போக்கையும் சுட்டிக் காட்டு கிறது.

— ஆசிரியர்.

அச்சு : குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு—12.
ஆசிரியர் : செ. கணேசலிங்கன்